# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்
## நிர்வாகக் குழு கூட்டம்
## *24-5-2026 * உதகமண்டலம்*

*2025-2026 வருடத்திய முதல் நிர்வாக குழு கூட்டம் 1-5-2026 அன்று பெரியநாயக்கன்பாளையம் குன்னாமை நிலையத்தில் நடைபெறுவதற்கான அழைப்பிதழ் அனுப்பிய பின், கோடை வெயிலின் தாக்கம் கருதி 24-5-2026 அன்று உதகையில் நடத்த உத்தேசிக்கப்பட்டு அதன்படி, சங்கத்தின் நிர்வாக குழு கூட்டம் 24-5-2026 அன்று உதகமண்டலத்தில் அமைந்துள்ள காபி ஹவுஸில் மாலை 3.30 முதல் 5 மணி வரை நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் வருமாறு.*

**முக்கிமலை வாழ் உறுப்பினர்கள்**

*திரு K.K. ராமா கவுடர்*
*திரு L. பெள்ளி*
*திரு B பீமன்,*
*டாக்டர் N ராஜன்,*
*திரு J நகுலன்,*
*திரு. N ராஜேந்திரன்,*
*திரு R. சுகுமார்*
*திரு B சத்தியசீலன்,*
*முனைவர் N சந்தோஷ்*

**கோவை வாழ் உறுப்பினர்கள்**

*திரு J. சந்திரன் – தலைவர்*
*திரு K. அரசு - உப தலைவர்*
*திரு R. சுப்பிரமணி – செயலாளர்,*
*திரு B. சகாதேவன் – பொருளாளர்*
*திரு J. கணேஷ் – இணைப்பொருளாளர்,*
*திரு K. ராமச்சந்திரன் - நிர்வாக குழு உறுப்பினர்*
*திரு B. மோகன்ராஜ் - நிர்வாக குழு உறுப்பினர்,*
*திரு K. மணி - புரவலர்*
*முனைவர் M N G மணி – புரவலர்*
*முனைவர் N. சுகுமாரன் – புரவலர்*
*திரு J B சுரேஷ் - அங்கத்தினர்*
*திரு J B சிவக்குமார் - அங்கத்தினர்*




நிர்வாக குழு கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து அங்கத்தினர்களை சங்கத்தின் தலைவர் திரு *J.* சந்திரன் அவர்கள் வரவேற்றார்.

இந்த நிர்வாக குழு கூட்டமானது திரு *R* சுகுமார் அவர்கள் எழுதியுள்ள "மண்ணின் மைந்தர்கள் - பகுதி 8" புத்தக வெளியீடு விழாவினை தொடர்ந்து நடைபெற்றது.




நீலகிரியில் பல அமைப்புகளின் பாராட்டுதலை பெற்ற திரு சுகுமார் அவர்களுக்கு கூட்டம் தொடங்கும் முன் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன. திரு சுகுமார் அவர்களின் பணி



மேன்மேலும் சிறக்க சங்க உறுப்பினர்கள் தேவையான ஆதரவு கரம் அளிப்பதாக உறுதி அளித்தனர்.


தொடர்ந்து நடைபெற்ற நிர்வாக குழு கூட்டத்தில், கீழ்கண்ட முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. சங்கத்தின் 2025-2026 நிதியாண்டிற்கான வரவு செலவு கணக்குகளை நிர்வாகக்குழு சரி பார்த்து அதற்கு ஒப்புதல் அளித்தது. இந்த ஆவணம் ஏற்கனவே அனைத்து அங்கத்தினர்களிடம் பகிரப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நிர்வாக குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இந்த வரவு செலவு கணக்கு அடுத்த பொதுக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு, அதன் ஒப்புதலுடன் அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.


2. சங்கத்தின் உறுதியான, வெளிப்படையான மற்றும் ஸ்திரத்தன்மையுள்ள நிர்வாக நடைமுறைகளை உறுதி செய்யும் வகையில், ஒவ்வொரு வருடமும் பொது ஆவணத் தொகுப்பு, நிர்வாக ஆவண தொகுப்பு, மற்றும் கூட்ட அழைப்பிதழ், அதில் கலந்து கொண்டவர்கள் விவரம் ஆகியவை தயார் செய்ய வேண்டும் என்ற பரிந்துரையை தொடர்ந்து, 2024-2025 மற்றும் 2025-2026 ஆண்டிற்கான பொது ஆவணத் தொகுப்புகளும், கூட்டத்தில் கலந்து கொண்டோர் பற்றிய விவரங்களும் புத்தக வடிவில் பகிரப்பட்டது.









2024-2025 ஆண்டிற்கான நிர்வாக ஆவண தொகுப்பையும் சேர்த்து ஐந்து ஆவணங்கள் அங்கத்தினர்களிடம் பகிரப்பட்டது. 2025-2026 வருடத்திற்கான வரவு செலவு கணக்கிற்கு அடுத்த பொதுக்குழுவில் ஒப்புதல் பெற்று, பின்பு வருமான வரித்துறையில் சமர்ப்பிக்கப்பட்ட, தணிக்கை செய்யப்பட்ட ஆவணங்களுடன் 2025-2026 வருடத்திற்கான நிர்வாக ஆவண தொகுப்பு அக்டோபர் 2026 மாதத்தில் தயார் செய்யப்பட்டு அங்கத்தினர்களுடன் பகிரப்படும். இந்த ஆவணங்கள் நமது இணையதளத்தில் அங்கத்தினர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வைக்காக பதிவேற்றப்படும். நமது நிதிநிலை அறிக்கையில் கையொப்பமிடும்




அங்கத்தினர்கள் வசம் இந்த ஆவணங்கள் புத்தக வடிவில் இருக்க வேண்டும் என்ற தேவையின் படி பத்து பிரதிகள் மட்டும் அச்சடிக்கப்பட்டு அவர்களிடம் அளிக்கப்பட்டது. இந்த ஆவணங்களை நிர்வாக குழு அங்கத்தினர்கள் மட்டுமல்லாமல் மற்றவர்களும் படித்து சங்க நிகழ்வுகள் ஆரம்ப காலம் முதல் எப்படி பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை தெரிய வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

3. சங்க உறுப்பினர்கள் 2025-2026 நிதியாண்டிற்கான சந்தாவை வங்கிக் கணக்கில் செலுத்துவதற்கு நினைவூட்டல் செய்ய வேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

4. நமது அங்கத்தினர்கள் அவ்வப்பொழுது ஒன்று சேரும் அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்து ஒரு பொதுக்குழு கூட்டம் கோவையிலும் இன்னொன்று மகாசிவராத்திரி விழா சமயத்தில் ஊரிலும் நடந்து வருகிறது. அடுத்த பொதுக்குழு கூட்டம் கோயமுத்தூரில் ஜூலை 15 முதல் ஆகஸ்ட் 15 தேதிக்குள் நடத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

5. கோவையில் நடைபெறும் பொதுக்குழு கூட்டம் நமது ஆண்டு விழாவாகவும் நடத்துவது என்று ஏற்கனவே பரிந்துரை செய்யப்பட்டது. இதற்கு அமரர் திரு பெள்ளி கவுடர் குடும்பம் சார்பாக ரூபாய் 10,000 நன்கொடை அளிக்க முன்வந்துள்ளனர். சங்கத்தின் தலைவர் திரு J சந்திரன் குடும்பம் சார்பாக ரூபாய் 10,000 ஆண்டு விழாவிற்காக நன்கொடை அளிப்பதாக தெரிவித்துள்ளனர். இது போன்று மற்ற அன்பர்களும் அவர்களால் முடிந்த வரை ஆண்டு விழாவிற்கு நன்கொடை அளிக்கும் பட்சத்தில், ஆண்டு விழா சென்ற வருடங்கள் போலவே சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்ய முடியும் என்பதையும் நிர்வாக குழு பதிவு செய்தது. ஆண்டு சந்தா மற்றும் மகாசிவராத்திரி சந்தா மட்டும் அங்கத்தினர்களுக்கு கட்டாயம் என்பதனை கருத்தில் கொண்டு ஆண்டு விழா நடைபெற நன்கொடை அளிக்க அங்கத்தினர்களின் விருப்பத்திற்கு விட்டு விட வேண்டும் என்றும் அதற்காக கட்டாய சந்தா அமைப்பு தற்பொழுது ஏற்படுத்தக் கூடாது என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

6. சங்க அங்கத்தினர்கள் மற்றும் அவர்கள் குடும்ப சொந்தங்களுக்கு அளிக்கப்படும் மருத்துவ உதவித்தொகை வகையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உடல்நிலை தேறி வரும் திருமதி காயத்ரி பெள்ளி அவர்களுக்காக திரு L பெள்ளி அவர்களுக்கும், திருமதி ஆலுமிச்சி அம்மாள் அவர்களுக்காக அவரது மகன் மற்றும் சங்க பொருளாளர் திரு B சகாதேவன் அவர்களுக்கும் தலா ரூபாய் 5,000 காசோலையாக அளிக்கப்பட்டது.





இதுவரை மருத்துவ உதவி பெறாத அங்கத்தினர்கள் அவர்கள் குடும்பத்தில் கணவன், மனைவி, தந்தை, தாய் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் பொழுது சங்கத்திற்கு தெரிவித்து மருத்துவ நிதி உதவி பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இதுவரை சங்க உறுப்பினர்கள் 19 பேர் இந்த உதவித்தொகை பெற்றுள்ளனர் என்பது பாராட்டுதற்குரியது என்று நிர்வாக குழு பதிவு செய்தது.

7. சங்க உறுப்பினர்கள் நமது சங்கத்தின் வாட்ஸ் அப் குழுவில் பகிரும் செய்திகள் குறித்து விவரமாக நிர்வாக குழு விவாதித்தது. நமது அங்கத்தினர்கள் சங்கத்தின் நன்மை கருதி அவ்வப்பொழுது வேலை வாய்ப்புகள், படுக கலாச்சாரம் போன்ற பதிவுகளை பொது வாட்ஸ் அப் குரூப்பில் பகிர்கின்றனர். இவை அங்கத்தினர்களுக்கு உபயோகமாக இருந்தாலும், சங்க வாட்ஸ் அப் குழுவில் சங்கத்தினை பற்றி பிரதானமாக நாம் பதிவிடும் பதிவுகளுக்கு இடையில் இந்த பதிவுகளும் வருவதால் கடந்த கால சங்க பதிவுகளை கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்படுகிறது என்பதும் கருதப்பட்டது.

மேலும் வீடியோ வடிவத்தில் இருக்கும் பல பதிவுகள் அங்கத்தினர்களின் தொலைபேசிகளில் பதிவிறக்கம் செய்வதிலும் இடையூறுகள் இருக்கின்றன என்பது நினைவு படுத்தப்பட்டது. இந்த கருத்துரைகளின் அடிப்படையில் வரும் நாட்களில் சங்க வாட்ஸ் அப் குழுவில் சங்கம் சம்பந்தப்பட்ட செயல்பாடுகள் மட்டும் பகிர வேண்டும் என்றும் வேறு எந்தவிதமான பொதுப்பதிவுகளும் பகிரக்கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இதன் அடிப்படையில் வரும் காலங்களில் காலை வணக்கம், மாலை வணக்கம், பண்டிகை வாழ்த்துக்கள், வேலை வாய்ப்பு சம்பந்தப்பட்ட பதிவுகள், படுக பாடல்கள், படுகர் பற்றிய வீடியோக்கள் ஆகியவை கண்டிப்பாக நமது வாட்ஸ் அப் குழுவில் பகிரப்படக்கூடாது என்று ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. அங்கத்தினர்கள் ஒரு பதிவு குறிப்பிட்ட அங்கத்தினரின் கவனத்திற்கு செல்ல வேண்டும் என்று நினைத்தால் அதனை அவர்கள் தனிப்பட்ட

*தொலைபேசி எண்ணுக்கு அனுப்பலாம் என்றும், கண்டிப்பாக சங்க வாட்ஸ் அப் குழுவில் பகிரக்கூடாது என்றும் தீர்மானிக்கப்பட்டது.*

8. *வாட்ஸ் அப் பதிவுகளில் சமீபத்தில் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் மருத்துவ உதவி கேட்டு சமூக வலைத்தளத்தில் பகிரப்படும் செய்திகளும் நமது வாட்ஸ் அப் குரூப்பில் நமது சொந்தங்களால் பகிரப்பட்டது. எந்த நிலையிலும் சங்கத்தின் நிதி என்பது சங்க உறுப்பினர்கள் மற்றும் அவர்கள் குடும்பங்களுக்கு மட்டுமே உபயோகப்படுத்த வேண்டிய கட்டாயத்தையும் அங்கத்தினர்கள் நினைவு கூர்ந்தனர். எனவே இந்த விதமான பொது உதவி கேட்கும் பதிவுகளை வாட்ஸ் அப் குழுவில் பதிவிடுவதை தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. தனிப்பட்ட முறையில் நமது அங்கத்தினர்கள் பலரும் இதுபோன்ற உதவிகளை செய்து வருகிறார்கள் என்பதும் பகிரப்பட்டது.*

9. *நிர்வாக குழு கூட்டத்திற்காக தேநீர் மற்றும் சிற்றுண்டி ஏற்பாடு செய்து தமது இல்லத்தில் நமது அங்கத்தினர்களை உபசரித்த டாக்டர் N ராஜன் அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.*

*சங்கத்தின் உப தலைவர் திரு K. அரசு அவர்கள் நன்றி தெரிவிக்க நிர்வாக குழு கூட்டம் இனிதாக முடிவுற்றது.*